பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

30 07 2025 Wednesday 6 45 am

தலைப்புச் செய்திகள்

1. ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையை நிறுத்தும்படி, எந்தவொரு நாட்டின் தலைவரும் இந்தியாவை வலியுறுத்தவில்லை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

2. நாடுமுழுவதும் 16 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திருமதி. அனுப்ரியா பட்டேல் கூறியுள்ளார்.

3. புவி கண்காணிப்புக்கான NISAR செயற்கைக்கோள், ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து இன்று மாலை விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

4. நாட்டிலேயே அதிக வரி செலுத்தும் மாநிலமாக தமிழகம் திகழ்வதாக மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி கூறியுள்ளார்.

5. சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி பிரேஸிலில் இன்று தொடங்குகிறது.

>>>>>>>><<<<<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையை நிறுத்தும்படி, எந்தவொரு நாட்டின் தலைவரும் இந்தியாவை வலியுறுத்தவில்லை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

மக்களவையில் ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், பாகிஸ்தான் நேரடியாக கேட்டுக் கொண்டதன் பேரிலேயே தாக்குதல் நிறுத்தப்பட்டதாக கூறினார்.

பாகிஸ்தான் தாக்குதல் நடத்தினால் இந்தியா தகுந்த பதிலடி கொடுக்கும் என்பதை அமெரிக்க துணை அதிபர் திரு. J.D. Vance-சுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது தெரிவித்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானில் செயல்பட்டு வந்த தீவிரவாத முகாம்களை இந்தியா அழித்து விட்டதாக கூறிய அவர், பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளை இந்தியப் படைகள் 22 நிமிடங்களில் ஒழித்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

அணுகுண்டை காட்டி மிரட்டும் பாகிஸ்தானுக்கு, இந்தியா ஒரு போதும் அடிபணியாது என்பதை ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை உலக நாடுகளுக்கு உணர்த்தியிருப்பதாவும் அவர் கூறினார்.

இந்தியாவின் துல்லியமான தாக்குதலை தடுத்து நிறுத்தும் திறன் பாகிஸ்தானுக்கு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள், ட்ரோன்கள் உள்ளிட்டவற்றை பயன்படுத்தி நமது படைகள் நடத்திய தாக்குதல் மூலம், சுயசார்பு இந்தியாவின் வலிமையை உலக நாடுகள் அறிந்து கொண்டிருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

பிரதமரின் மக்கள் மருந்தகம் திட்டத்தின் கீழ், நாடுமுழுவதும் 16 ஆயிரத்து 912 மக்கள் மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாக மத்திய ரசாயன, உரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்ரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், 2027ஆம் ஆண்டுக்குள் 25 ஆயிரம் மக்கள் மருந்தகங்களை திறக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தரமான மருந்துகள் குறைந்த விலையில் மக்களுக்கு கிடைக்கச் செய்யும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், இதன் காரணமாக கடந்த 11 ஆண்டுகளில் மக்களுக்கு 38 ஆயிரம் கோடி ரூபாய் சேமிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

2 ஆயிரத்திற்கும் அதிகமான மருந்துகள், அறுவை சிகிச்சைக்கான 315 சாதனங்கள், மக்கள் மருந்தகங்களில் கிடைப்பதாகவும் திருமதி. அனுப்ரியா பட்டேல் கூறினார்.

>>>>>>>><<<<<<<<

இஸ்ரோவும், அமெரிக்காவின் நாசாவும் இணைந்து தயாரித்துள்ள புவி கண்காணிப்புக்கான NISAR செயற்கைக்கோள், ஸ்ரீஹரிக்கோட்டாவிலிருந்து இன்று மாலை விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

இதற்கான கவுண்டவுன் நேற்று பிற்பகல் தொடங்கிய நிலையில், இன்று மாலை 5.40 மணியளவில் GSLV F.16 ராக்கெட் மூலம் இந்த செயற்கைக்கோள் செலுத்தப்படவுள்ளது.

2 ஆயிரத்து 392 கிலோ எடை கொண்ட நிஸார் செயற்கைக்கோள், நாசாவின் L Band, இஸ்ரோவின் S Band ஆகிய இரட்டை அதிர்வு எண் கொண்ட செயற்கைத் துளை ரேடார் வகையை சேர்ந்ததாகும்.

இது, வானிலை மற்றும் பகல் - இரவு பற்றிய தரவுகளை வழங்குவதுடன், பூமியில் ஏற்படும் சிறிய மாற்றங்களைக் கூட துல்லியமாக கண்டறிந்து தகவல் அளிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மண்ணின் ஈரப்பதம், நீர்வளம் மற்றும் கடலோர கண்காணிப்பு பணிகளுக்கும் உதவிகரமாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்படுவதை பார்வையிட, திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த அரசு பள்ளி மாணவ மாணவியர் 50 பேர் ஸ்ரீஹரிகோட்டா புறப்பட்டனர்.

இவர்களை ஆட்சியர் திரு. சரவணன் வழியனுப்பி வைத்தார்.

>>>>>>>><<<<<<<<

நாட்டிலேயே அதிக வரி செலுத்தும் மாநிலமாக தமிழகம் திகழ்வதாக மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், அகரம் பேரூராட்சியில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்திலிருந்து மத்திய அரசுக்கு சரக்கு மற்றும் சேவை வரியாக அதிக வருவாய் கிடைப்பதாக தெரிவித்தார்.

மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்வதாகவும் திரு. ஐ. பெரியசாமி குறிப்பிட்டார்.

>>>>>>>><<<<<<<<

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருகே, மென்பொறியாளர் கவின் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த வழக்கில் காவல்துறை ஒருதலைபட்சமாக செயல்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

திமுக ஆட்சியில் ஆணவப் படுகொலைகளும், சாதி மோதல்களும் அதிகரித்துள்ளதாகவும் திரு. எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

பிரதமரின் கிராமச் சாலைகள் திட்டம், தேனி மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம், இணைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவது, கிராமங்களின் வளர்ச்சிக்கு பேருதவியாக உள்ளது என்று பயனாளிகள் தெரிவித்தனர்.

>>>>>>>><<<<<<<<

பாரம்பரிய தற்காப்புக் கலைகளான கொரடி மற்றும் மல்லர் கம்பம் போன்ற சாகச விளையாட்டுகளை கற்பதில் சேலத்தைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுபோன்ற விளையாட்டுக்கள், சிறுவர்களின் மனதையும், உடலையும் ஒருங்கிணைப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>>><<<<<<<<

இருவரிச் செய்திகள்

காஸா பகுதியில் வசிக்கும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை போக்க, இஸ்ரேல் நடவடிக்கை எடுக்காவிட்டால், பாலஸ்தீனத்தை இங்கிலாந்து அங்கீகரிக்கும் என்று அந்நாட்டு பிரதமர் திரு. Keir Starmer தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

நேபாள தலைநகர் காத்மாண்டுவில் நடைபெறவுள்ள வாகன கண்காட்சியில் இந்தியாவைச் சேர்ந்த முன்னணி வாகன தயாரிப்பு நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளதாக அந்நாட்டு வாகன இறக்குமதி கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

மஹாராஷ்ட்ரா மற்றும் நாகாலாந்து மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ள 38 PM SHRI பள்ளிகளை மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

>>>>>>>><<<<<<<<

சிக்கிம் மாநிலத்தின் வளர்ச்சியை விரைவுபடுத்த, ITS என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<<

திருவண்ணாமலையில் புதிய பேருந்து நிலையம் மற்றும் காய்கறி சந்தை கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளை, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அறிவுறுத்தியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<

காஞ்சிபுரம் மாவட்டம். ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட செல்வழிமங்கலத்தில் ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

>>>>>>>><<<<<<<<<

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாத சுவாமி திருக்கோவில் ஆடித்தபசு திருவிழாவில் ஏராளமான மக்கள் பங்கேற்றனர்.

>>>>>>>><<<<<<<<<

சர்வதேச டேபிள் டென்னிஸ் Star Contender போட்டி பிரேஸிலில் இன்று தொடங்குகிறது.

வரும் 3ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் மனவ் தாக்கர், ஹர்மித் தேசாய், மனுஷ் ஷா, பயஸ் ஜெயின் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் மனிக்கா பத்ரா. யசஸ்வினி கோர்படே, ஸ்வஸ்திகா கோஷ் உள்ளிட்டோரும் கலந்து கொள்கின்றனர்.

இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவுகளிலும் இந்திய வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

>>>>>>>><<<<<<<<<

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் நடைபெற்ற தென்னிந்திய ஹாக்கி போட்டியில், தமிழக காவல்துறை அணி முதல் பரிசை வென்றது.

நேற்று மாலை நடைபெற்ற இறுதிப் போட்டியில் அந்த அணி, மத்திய சுங்கவரித்துறை அணியை வென்றது.

>>>>>>>>end<<<<<<<<<